முருகப்பெருமான் துணை

**மகான் கபிலர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.05.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வெளிகண்ட அரங்கா
ஞானிகளை கலியிலும் படைக்க
வானவர்கள் துணை நிற்க
வழிநடத்தும் ஞான தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிபட சோபகிருது விடைதிங்கள்
அறிவிக்க சப்தம திகதி கதிர்வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 07 ம் நாள், 21.05.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. வாரமதில் கபிலர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
தரமான தொண்டர்கள் படையை
தரணியெங்கும் படைத்து நன்கு
4. படைத்துமே மாற்றம் செய்திட
பக்குவமான சன்மார்க்க நெறி
கொடையாக மக்களுக்குத் தந்து
குருவாக அருளும் அரங்கனே
5. அரங்கனே கலியினில் சிறந்த
ஆற்றல் மிக்க மாதவசி
அரங்கன் வாழ் குடில் நோக்கி
அகிலத்தார் வந்து இணைந்து
6. இணைந்துமே சன்மார்க்க நெறி
ஏற்று பின்பற்றி சீடர்களாகி
துணையாக தரும சேவையிலும்
தொண்டு செய்து தொடர் பங்களிப்பு
7. பங்களிப்புச் செய்து வருக
பாருலகில் குருவருள் கூடி
இங்கனமே கலிமாயை வழி
எந்தவித கேடும் அனுகாத வண்ணம்

8. வண்ணமுடன் நிலைகள் தேறி
வருங்காலச் சூழல்களை
எண்ணமதில் தூய்மைபட கனிந்து
எதிர்காலம் நல்லத் தலைமை

9. தலைமை அமைய சேவையாற்றும்
தன்னார்வத் தொண்டர்களாக
தலைவன் ஆறுமுகன் ஆசிபெற்ற
தருமபலம் கொண்ட ஞானவான்களாக

10. ஆகவே மாற்றம் ஆற்றல்
அளவிலாத் தேறி நின்று
மகான் அரங்கன் வழிநடத்த
மாற்றம் உலகினில் புரிவர்

11. புரிவர் ஞான ஆட்சிதனை
பூமி அடைகின்ற வண்ணம்
வருவர் ஞானிகள் ஆகவே
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–